

மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிமனையினை ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் செந்தில்நாதன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக சார்பில் போட்டியிடும் மருத்துவர் மா. மதிவேந்தன் இராசிபுரம் ஒன்றியம், பட்டணம் முனியப்பம்பாளையம் ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் . கே.பி.ஜெகநாதன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் தீவிர வாக்கு சேகரித்தார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஶ்ரீநிதி வெங்கடேஷை ஆதரித்து கோவை மாநகர மாவட்ட பொறுப்பாளர், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கழக தீர்மானக் குழு செயலாளர் நா.கார்த்திக், பகுதி கழக பொறுப்பாளர் கஸ்தூரி அருண், தலைமை செயற்குழு உறுப்பினர் மணிகண்டன், வட்டக் கழக செயலாளர் ஜெபமாலை தாஸ் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணன் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் இராவணாபுரம் ஊராட்சி அனுமந்தபட்டினம் பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் ஒன்றிய கழகச் செயலாளர் தி.செழியன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். அவருக்கு பெண்கள் பூக்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த வாக்கு சேகரிப்பின் போது நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன், பரமத்தி பேரூர் செயலாளர் ரமேஷ் பாபு, பரமத்தி பேரூராட்சித் தலைவர் மணி, நாமக்கல் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி தலைவர் அருண் பிரதாப் சக்கரவர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் சண்.இராமநாதனுக்கு ஆதரவாக தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் நாஞ்சிக்கோட்டை பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.




சிறுகதை மன்னன்

எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின்

35 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்புடையீர்,வணக்கம்

இன்று (13.04.2026 – திங்கட்கிழமை) சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் 35 ஆம் ஆண்டு நினைவு நாளன்று சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயலாளர்

மாண்புமிகு.தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**கேஆர்.பெரியகருப்பன்** B.Com.BL., அவர்களின் தலைமையில் காலை 7 மணியளவில் திருக்கோஷ்டியூர் அன்னாரது இல்லத்தில் நினைவு அஞ்சலி செலுத்தி விட்டு அதனைத் தொடர்ந்து காலை 8.00 மணியளவில் அன்னாரின் நினைவிடம் சென்று மலர் அஞ்சலி செலுத்தப்படும்.இந்நிகழ்ச்சியில் கழகத்தினர் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

**இவண்**

**சிவகங்கை மாவட்ட தி.மு.க**

**மற்றும்**

**எஸ்.எஸ்.தென்னரசு குடும்பத்தினர்**



ஏப்ரல்-13, 2026

35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிறுகதை மன்னன்

எஸ்.எஸ்.தென்னரசு

முன்னாள் அமைப்பு செயலாளர்

அவர்களின் நினைவைப் போற்றுவோம்..

...இவண்...

**கேஆர்.பெரியகருப்பன்** B.Com.,B.L.,
கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச்செயலாளர்

**மு.தென்னவன்** M.A.,
முன்னாள் அமைச்சர், மாநில இலக்கிய அணி புரவலர்

சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு வம்சம்

**எஸ்.எஸ்.ஏ.வல்லபாய்** B.V.A,PGAID.,

மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் – சிவகங்கை மாவட்டம்